இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 61 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – புரட்டாசி 24 – ஞாயிற்றுக்கிழமை 11 அக்டோபர் 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 61 : Thiruvalluvar Year - 2057 - Purattasi 24 - Sunday 11 October 2026 - Madurai 8 Pages ₹ 5.00



திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் – அறிவுச் செல்வம் – கழகச் செல்வம் – கருத்துச் செல்வம் முரசொலி செல்வம் அவர்களின் 2ஆம் ஆண்டு நினைவு நாளான நேற்று (10.10.2026), சென்னை 'முரசொலி' வளாகத்தில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மாலை அணிவித்தும், திருவுருவப் படத்திற்கு மலர் தூவியும் மரியாதை செலுத்தினார். கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு எம்.எல்.ஏ., பொன்முத்துராமலிங்கம், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, இயக்குநர் அமிர்தம், மு.க.தமிழரசு, தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர் முனைவர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., 'முரசொலி' பொது மேலாளர் எஸ்.இராஜசேகர் ஆகியோர் படத்தில் உள்ளார்கள்.

தலைமைத் தேர்தல் ஆணையர் பதவி விலகக் கோரிப் போராடும் இளைஞர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகள்

நெருக்கடி நிலை காலத்தை விட மிகவும் கொடுமையானது!

ஒன்றிய – த.வெ.க. அரசுகளுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம்!

சென்னை, அக்.11-

"தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக் கோரி போராடும் இளைஞர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகள் நெருக்கடி நிலை காலத்தை விட மிகவும் கொடுமையானது" என்று ஒன்றிய மற்றும் த.வெ.க. அரசுகளுக்கு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார்.

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலகக்கோரி, டெல்லி ஜந்தர் மந்தரில் கரப்பான் பூச்சி கட்சியினர் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்தனர். போராட்டத்தில் கலந்து கொள்வதற்காக, கரப்பான் பூச்சி கட்சி நிறுவனர் அபிஜித் தீப்கே, மும்பையிலிருந்து விமானம் மூலம் டெல்லி வந்தார். அப்போது, டெல்லி விமான நிலையத்தில், விமானத்தில் வைத்தே அபிஜித் தீப்கேவை போலீசார் கைது செய்தனர். முன்னதாக, தமது சமூக வலைதள பக்கத்தில் பதிவிட்ட அபிஜித் தீப்கே, நாங்கள் போராட்டம் தொடங்குவதற்கு முன்பே மோடி தமது தோல்வியை ஒப்புக்கொண்டு விட்டதாக பதிவிட்டது குறிப்பிடத்தக்கது.

இதற்கிடையே, டெல்லியில் போராட்டத்தில் பங்கேற்பதற்காக, ஜந்தர்மந்தர் நோக்கி வந்த ஆயிரக்கணக்கான இளைஞர்கள், இளம்பெண்களை போலீசார் கைது செய்து வருகின்றனர். இதுவரை சுமார் 5 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. ஜந்தர் மந்தருக்கு போராட்டக்காரர்கள் வருவதை தடுக்கும் வகையில் முக்கிய சாலைகள் மூடப்பட்டுள்ளன. இதற்கிடையே, கரப்பான் பூச்சி கட்சியின் போராட்டத்தில் பங்கேற்கச் சென்ற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்கள் பினராயி விஜயன், பிருந்தா காரத் உள்ளிட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேபோல், டெல்லியில் முன்னாள் முதல மைச்சர் அரவிந்த் கெஜ்ரிவால் போராட்டத்தில் ஈடுபட முயன்ற நிலையில், அவரை வீட்டில் வைத்தே போலீசார் கைது செய்தனர்.

SIR முறைகேடுகளுக்கு காரணமான தலைமை தேர்தல் ஆணையர் பதவி விலகக்கோரி நாடு முழுவதும் போராட்டம் தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில், ஞானேஷ்குமாரை பதவியிலிருந்து நீக்கக்கோரி சென்னை அண்ணா சாலையில் அனைத்திந்திய மாணவர் பெருமன்றத்தினர் போராட்டத்தில் ஈடுபட்டனர். சென்னை சிம்சனில் இருந்து பேரணியாகச் சென்று தமிழ்நாடு தலைமை தேர்தல் அதிகாரி அலுவலகத்தை முற்றுகையிட முயன்ற மாணவர் அமைப்பினரை விஜயின் அராஜக காவல்துறை தடுத்து நிறுத்தியது. மேலும், மாணவர்களை தரதரவென இழுத்துச் சென்றும், குண்டுக்கட்டாக தூக்கிச் சென்றும் போலீசார் கைது செய்ததால் அப்பகுதியில் பரபரப்பு நிலவியது.

இதனையடுத்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்ட தாவது:-

இன்று டெல்லியில் அரங்கேறி வரும் நிகழ்வு களும், அமைதிவழியில் போராடுபவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் அடக்குமுறைகளும், நான் அனுபவித்த நெருக்கடி நிலைக் காலத்தின் வலி மிகுந்த நினைவுகளை மீண்டும் கண்முன் கொண்டு வருகின்றன.

டெல்லியிலும் நாடு முழுவதிலும் கைது செய்து வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்கள், மாண வர்கள், போராடும் இளைஞர்கள் அனைவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும்.

காவல்துறையை ஏவிவிடும் த.வெ.க. அரசு!

தமிழ்நாட்டில் போராடும் மாணவர்கள் மீது, பா.ஜ.க.வின் கிளையாகச் செயல்பட்டுக்கொண்டு, காவல்துறை அடக்குமுறையை ஏவிவிடும் த.வெ.க. அரசையும் வன்மையாகக் கண்டிக்கின்றேன்.

அமைதி வழியில் போராடுவதற்கான தங்களது ஜனநாயக உரிமையைப் பயன்படுத்தும் இளைஞர்கள் மீதான தாக்குதலை ஒன்றிய அரசு உடனடியாக நிறுத்த வேண்டும். எதிர்ப்பை வெளிப்படுத்துவது குற்றமல்ல. ஜனநாயகத் தைக் காப்பதற்காக எழும் குரலை ஒடுக்குவது ஜனநாயகத்தையே அழித்துவிடும்.

ஞானேஷ் குமார்
பதவி விலகலில் சமரசம் இல்லை!

தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்பதில் எந்தச் சமரசத்துக்கும் இடமில்லை. அவர் பதவி விலகு வதோடு மட்டுமல்லாமல், தேர்தல் ஆணையத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள அனைத்து பாதிப்புகளும் சரி செய்யப்பட்டு, அதன் சுதந்திரமும் நேர்மையும் மீட்டெ டுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

அறிவுச் செல்வம் - கழகச் செல்வம் - கருத்துச் செல்வம்

முரசொலி செல்வம் 2 ஆம் ஆண்டு நினைவு நாள்!

'முரசொலி' வளாகத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு – கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மரியாதை செலுத்தினார்!

சென்னை, அக்.11 -

திராவிட இயக்கக் கொள்கைச் சிங்கம் - அறிவுச் செல்வம் - கழகச் செல்வம் - கருத்துச் செல்வம் முரசொலி செல்வம் அவர்களின் இரண்டாமாண்டு நினைவு நாள் நேற்று (10.10.2026)!

இந்நாளில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர் கள், சென்னை 'முரசொலி' வளாகத்தில் தாம் நிறுவி யுள்ள முரசொலி செல்வம் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து வணங்கி திருவுரு வப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

அதன் விவரம் வருமாறு:-

பேரறிஞர் அண்ணாவின் அன்பில் திளைத் தவர், முத்தமிழ றிஞர் கலைஞரின் நெஞ்சில் நீங்கா இடம் பிடித்தவர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு உற்ற துணை யாக பக்க பலமாக இருந்தவர்; எல்லாவற்றிற்கும் மேலாக கழகத்தின் கேடயமாகத் திகழ்ந்தவர்,



முரசொலி செல்வம் அவர்கள்.

அந்தோ.. அந்த அறிவுச் செல்வத்தை, கழகச் செல்வத்தை, கருத்துச் செல்வத்தை இயற்கை நம்மிடமிருந்து பிரித்து இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன. எந்நாளும் நெஞ்சில் அவர் நினைவுகளை ஏந்தி முரசொலி தன் பயணத்தைத் தொடர்கிறது.

நேற்று (10.10.2026) முரசொலி செல்வம் அவர்களின் இரண்டாவது நினைவு நாளில் 'முரசொலி'யின் வளாகத்தில் உள்ள திருவுருவச் சிலைக்கு மரியாதை செலுத்திட காலை 9.30 மணி யளவில் 'முரசொலி' அலுவலகத்திற்கு கழகத் தலைவர் அவர்கள் வருகை தந்து அன்னாரின் திருவுருவப் படத்திற்கு மலரஞ்சலி செலுத்தினார்.

இந்நிகழ்வில் கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச் செயலாளர் ஆ.இராசா எம்.பி., கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, இயக்குநர் அமிர்தம், மு.க.தமிழரசு, முன்னாள் அமைச்சர்கள் எ.வ.வேலு எம்.எல்.ஏ., பொன்முத்துராமலிங்கம், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு எம்.எல்.ஏ., கழக செய்தித் தொடர்புக் குழுத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன், கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை,

தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர் முனைவர் கி.இராஜமாணிக்கம் ஐ.ஏ.எஸ். (ஓய்வு), தலைமை நிலையச் செயலாளர்கள் துறைமுகம் காஜா, பூச்சி முருகன், துணை அமைப்புச் செய லாளர்கள் ப.தாயகம் கவி, எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ.,

சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு எம்.சி., தேனி தெற்கு மாவட்டச் செய லாளர் கம்பம் இராம கிருஷ்ணன், திருவண்ணா மலை வடக்கு மாவட்டச் செயலாளர் எம்.எஸ். தரணிவேந்தன் எம்.பி., கழக தீர்மானக்குழுத் தலைவர் கவிஞர் தமிழ்தாசன், கடையநல்லூர் தி.மு.இராஜேந்திரன் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.ஏ. இள.புகழேந்தி, கழக செய்தித் தொடர்புக் குழு இணைச் செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, 'முரசொலி' சிங்காரம், ஈரோடு இறைவன், ஆயிரம்விளக்கு பகுதிச் செயலாளர்கள் மா.பா. அன்புதுரை, வினோத் வேலாயுதம், மாவட்ட இளை ஞரணி அமைப்பாளர்கள் ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, ராஜா அன்பழகன், பகுதிச் செயலாளர் கே.ஏழுமலை,

பொதுக்குழு உறுப்பினர் வி.எஸ்.ராஜ், மாவட்டப் பொருளாளர் ஜெ.எஸ்.அகஸ்டின் பாபு, புழல் வடக்கு ஒன்றியச் செயலாளர் நாராயணன், மாற்றுத் திறனாளிகள் அணி மாநிலச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன், துணைச் செயலாளர் வேங்கை வெங்கடேஷ், மயிலை சி.தசரதன், இரா.தம்பிதுரை,

மாவட்ட சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு அமைப்பாளர் சேப்பாக்கம் எஸ்.எச்.ரகமதுல்லா, எஸ்.எம்.கே.அண்ணாதுரை, வட்டச்செயலாளர்கள் ஆர்.ஜெகதீசன், கே.கோபி, க.சிட்டிபாபு, மோகன், த.பரி, த.குணசேகர், கே.எஸ்.தினேஷ், ஆர்.பாபு, பீட்டர் ஜான், டி.தேவராஜ், விஷ்ணு மற்றும் இதயத் பாஷா, டி.ஜசன்ட், சுரேஷ், முத்துக்குமார் உள்பட நூற்றுக்கணக்கான கழகத்தினர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.